1995 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

என்பதை அவர்கள் எண்ணி வருந்துவதற்கு முன்னர், மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் மாலை நிகழ்ச்சிகள், -- இப்போதே மணி 3-43 ஆகிவிட்ட காரணத்தால் வேண்டாம்--அவற்றை நாளை எடுத்துக் கொள்ளலாம் என்று எல்லா உறுப்பினர்களும் கருத்துத் தெரிவிக்கிற காரணத்தால், பேரவையின் ஒப்புதலோடு பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன; பேரவை நாளை காலை 10.00 மணிக்குக் கூடும் எனபதைத் தெரிவிக்கிறேன். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

116. 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (மருத்துவக் கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு-1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 8.3.1994 ஆம் நாளிட்ட 191 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

142 மானியக் கோரிக்கை எண் 17 - கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்)

143. மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்)